## இலங்கை மரமுந்திரை கூட்டுத்தாபனம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மரமுந்திரை கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள்

அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கூட்டுத்தாபனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 40,294,448 கிரயமான 43 மோட்டார் வாகனங்கள் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக் | இதற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யும் சிக்கலான நிலைமை காணப்படுவதனால் போதியளவு நிதிஏற்பாட்டினைப் | மோட்டார் வாகனங்களின் எதிர்கால விளைதிறன் ஆயுள் காலத்தை கவனத்தில் எடுத்து உரிய மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தும் நியமம் 16 இன் பிரகாரம் அந்த மோட்டார் வாகனங்களை மீண்டும் மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்று உடனடியாக மீள்மதிப்பீடு நடவடிக்கைகளினை பூர்த்தி செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 19 இன் 139 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ரூபா 27,703,878 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அதற்காக எதிர்காலப் பொறுப்புக்கள் ஏற்படும் இடர் நிலையைக் குறைப்பற்காக ஓய்வூதிப் பணிக்கொடை கடப்பாடு சம்பந்தமாக முதலீட்டுத் திட்டத்தை உருவாக்கி கொள்ள வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக பொதுத் திறை சேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதி ஏற்பாடு நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் கிடைக்காமையின் காரணமாக ஒரு முதலீட்டுத் திட்டத்தை தயாரிக்கும் இயலுமை இல்லாதிருந்தது. நிதி நிலைமை சிறப்பாகும் வேளையில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும். | எதிர்கால பொறுப்புக்களுக்கான இடரை குறைப்பதற்காக ஒரு முதலீட்டுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வேலை முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக நடைமுறை வேலை கணக்கிலிருந்து கட்டிடக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 1,726,013 மீதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாச்சலாகக் காட்டிப்பட்டிருந்தது. | உரிய சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்டு திருத்திய காசுப்பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உண்மையில் ஆண்டிற்கான உள்ளபடியான காசுப்பாச்சலை மாத்திரம் கவனத்திற்கு எடுத்து காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் பிரகாரம் உயிரியல் சொத்துக்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலிருந்து இக்கணக்காய்வுப் | நியமம் இலக்கம் 41 இன் பிராகாரம் உயிரியல் சொத்துக்கள் நியாயப்பெறுமதியில் |

| | | |
|---|---|---|
| நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பயன்பாட்டு உயிரியல் சொத்துக்களான முந்திரிகைப் பயிர்கள் நியாயப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்படாது உயிரியல் சொத்துக்களாக ரூபா 79,026,608 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பந்தியை நீக்குவதற்கு அப்போதிருந்த கணக்காய்வு உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என மேலும் தெரிவித்துக் கொள்கிறேன். | கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

| விடயம் | | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இறுதி இருப்பு<br>முந்திரிகை பருப்பு<br>முந்திரிகை விதை<br>முந்திரிகை நாற்றுக்கள் | <br>7,589,946<br><br>3,570,764<br><br>3,167,807 | இறுதி இருப்புக்களின் உள்ளமையினை உறுதிப்படுத்துவதற்கான இருப்பு அறிக்கை | அனைத்து இருப்புக்கள் சம்பந்தமான அறிக்கை கூட்டுத்தாபனத்திடம் உள்ளன. | இறுதி இருப்புக்களின் உள்ளமையினை உறுதிப்படுத்துவதற்குரிய தொடக்க அறிக்கையை வேண்டிக் கொண்டவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | சேதமடைந்த முந்திரிகை நாற்றுக்கள் | 1,007,126 | சேதமடைந்த முந்திரிகை நாற்றுக்கள் சம்பந்தமாக நாற்றுக்கள் தொடர்பான அறிக்கை | நாற்று மேடைகளின் மேற்பார்வை உத்தியோகத்தர்களால் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. உரிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் இயலுமை காணப்படுகின்றது. | சேதமடைந்த நாற்றுக்கள் சம்பந்தமான அறிக்கையை கணக்காய்விற்குச் சமர்பித்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | நானாவித கடன்கொடுத்தோர் | 853,000 | கடன் கொடுத்தோருக்குரிய மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதத்தை முடியுமான அளவு விரைவாகச் சமர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் | கடன் கொடுத்தோர் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய ரூபா 17,483,950 மீதிகளில் ரூபா 13,263,982 மீதி 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது இருந்தும் அந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிட வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 23,691,408 மீதியில் ரூபா 4,923,343 மீதி 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டதுடன் ரூபா 709,250 மீதி 03 - 07 இற்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்பட்டிருந்தும் அம்மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் உரிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடை அதிகாரச் சட்டம் | ஊழியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற மாதத்தினை உள்ளடக்கி பணிக்கொடை செலுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஓய்வு பெற்ற 05 ஊழியர்களுக்காக ரூபா 2,108,918 பணம் 2019 மே 31 ஆந் திகதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நிதிச் சிக்கலின் அடிப்படையில் பணிக்கொடை கொடுப்பனவு தாமதமடைந்துள்ள துடன் போதிய நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப் பட்ட உடன் மிகுதிக் கொடுப்பனகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் பணிக்கொடை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2012 யூலை 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான தெரிவுக் குழுவின் தீர்மானம் | பொது முயற்சிகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் சட்ட ரீதியாக உரிமை இல்லாத காணிகளின் உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தி யிருந்தும் மரமுந்திரிகை பயிரிடப்படுகின்ற 15,329 ஏக்கர் காணிகளை கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகள் 2019 மே 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | காணிகளின் சட்ட ரீதியான உரிமையைப் பொறுப்பேற்பதற்காகப் பூரணப்படுத்தப்பட வேண்டிய நடைமுறைகளுக்கு நீண்ட காலம் எடுப்பதுடன் வரிசை அமைச்சுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | பொது முயற்சிகள் தொடர்பான தெரிவுக்குழுவின் தீர்மானத்திற்கு இணங்க அறிக்கை சமர்ப்பிதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 வரிப் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2017 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வருமான வரி | உரிய வருமான வரி கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பல ஆண்டுகளாக | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருமான வரியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கடப்பாட்டுக்கு உட்பட்ட நிறுவனமாக இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான வருமான வரியை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டுயுள்ளதனால் சில காலதாமதம் காணப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 25 ஆம் இலக்க (திருத்திய) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டம் மற்றும் 2018 இன் 20 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வரிக்கு உட்பட்ட பொருட்கள், சேவைகள் அல்லது வழங்கல்கள் வருடாந்தம் ரூபா 12,000,000 இனை மிகைக்குமாயிருத்தல் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியினை செலுத்துவதற்காக (NBT) பதிவு செய்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 94,930,802 தொகையான புரள்வு காணப்பட்டிருந்தும் VAT மற்றும் NBT இற்காகப் பதிவு செய்து வரிகளை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட வரி விற்பனை விலைகளுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதனால் விசேட வரி நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்காக வரிசை அமைச்சினூடாக நிதி அமைச்சினால் எழுத்து மூல வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கிடைக்கின்ற பதிலின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பற்றாக்குறை ரூபா 39,642,728 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 42,335,722 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பற்றாக்குறையில் ரூபா 2,692,944 குறைவு அவதானிக்கப்பட்டது. வணிகப் பிரிவின் விற்பனைக் கிரயம் ரூபா 19,159,397 ஆல் குறைவடைதல் அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை நிர்ணயிக்கப்பட்டவாறு செலுத்தாதன் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான மிகைக்கட்டணமாக ரூபா 103,787 தொகையினைச் செலுத்த வேண்டியிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் நிதி சிக்கலின் காரணமாக நிர்யணிக்கப்பட்ட காலப்பகுதியின் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த முடியாதிருந்தனால் மிகைக் கட்டணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் தோல் முந்திரிகை ஒரு கிலோ கிராமின் சந்தை விலை ரூபா 390 இற்கும் ரூபா 505 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டிருந்தும் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் தோல் முந்திரிகை ஒரு கிலோ கிராமின் உற்பத்திக் கிரயம் ரூபா 541 இற்கும் ரூபா 2,679 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. இதற்கிணங்க உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதற்காக முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடைமுறைகள் போதியதாக இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டது. | இதற்காக தொடர்புபட்ட நேரடி செலவுகளையும் உள்ளடக்கி ஏனைய அனைத்து செலவுகளையும் கவனற்திற்கு எடுத்து உற்பத்திக் கிரயம் கணிக்கப்பட்டுள்ளது. நேரடிக் கிரயத்தை மாத்திரம் கவனத்திற் எடுத்து உற்பத்திக் கிரயத்தை கணித்து சந்தை விலைகளுடன் ஒப்பீடு செய்தல் சரியானது என்பது எங்களின் கருத்தாகும். கிரயத்தை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனங்களின் தோட்டங்களில் முந்திரிகை உற்பத்திக் கிரயத்தை குறைப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தோல் முந்திரிகை 99,119 கிலோ கிராம்களாக இருந்ததுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட | முந்திரிகைகைள விளைச்சல் செய்யும் காலத்தில் காணப்படுகின்ற காலநிலை மற்றும் வானிலை நிலைமையின் தாக்கத்தின் பேரில் இலக்கிடப்பட்ட மொத்த முந்திரிகை அறுவடையின் | உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அறுவடையை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளைகளைப் பூர்த்தி செய்வதற்காக அது போதியதாக இல்லாததன் காரணமாக வெளியிலிருந்தும் 6299 கிலோ கிராம் முந்திரிகைப் பருப்புக்களைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. அதற்கிணங்க தோட்டங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் தோட்டங்களில் கிடைக்கின்ற விளைச்சலை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடைமுறைகள் போதியதாக இருக்கவில்லை. | அளவை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததனால் செயன்முறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான கட்டளையைப் பூரணப்படுத்துவதற்கு வெளித்தரப்பினர்களிட மிருந்து முந்திரிகைகளை கொள்வனவு செய்ய வேண்டியதாக இருந்தது. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | சுதுவதுர ஆர விதைப் பூங்காவின் 160 ஏக்கர்களுக்கு அண்மித்த அளவான மற்றும் கமன்தளுவ தோட்டத்தின் ஒட்டுக்குளம் பகுதியிலுள்ள காணியில் 10 ஏக்கர்கள் அளவான காணிகள் வெளித்தரப்பினர்களால் கைப்பற்றப்பட்டு பருவகாலப் பயிர்கள் மற்றும் வெற்றிலை உள்ளடக்கிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் இக்காணிகளை மீளக் கைப்பற்றுவதற்காக தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்மன்தளுவ தோட்டத்தினதும் விதைப் பூங்காவினதும் காணிகளைக் கைப்பற்றுவது சம்பந்தமாக கூட்டுத்தாபனம் தற்பொழுது எடுத்துள்ள நடைமுறைகள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டுள்ளன. (பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளை வெளித்தரப்பினர்கள் கைப்பற்றுவது சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2013 யூன் 04 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள மருத்துவ திட்டத்திற்காக மாதாந்தம் ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருந்தும் இத்திட்டத்தின் கீழ் ஊழியர்களால் வெளி | கூட்டுத்தாபனத்தின் நிதி சிக்கலின் அடிப்படையில் இந்த மருத்துவ கொடுப்பனவுகள் தாமதமடைந்துள்ளன. நிதி சிக்கல்கள் நல்ல நிலைக்கு வந்ததன் பின்னர் உடனடியாக இந்த அனைத்து கொடுப்பனவுகளும் பூரணப்படுத்தப்படும். | மருத்துவ உதவித் திட்டத்திற்குரிய விலைப் பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சிகிச்சை மற்றும் வைத்தியசாலை சிகிச்சைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களுக்காக 02 ஆண்டுகள் காலமாக செலவுகளை மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) கூட்டுத்தாபனத்தினால் முந்திரிகை நாற்றுக்களை பகிர்ந்தளிக்கும் நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட 275,320 மற்றும் ஒட்டு முந்திரிகை நாற்றுக்களில் 208,921 நாற்றுக்கள் வெற்றியளிக்காதிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட 258,700 விதை மற்றும் ஒட்டு முந்திரிகை நாற்றுக்களில் 142,344 நாற்றுக்கள் வெற்றியளிக்காதிருந்தன. மே, யூன் மாதங்களில் விதை தளிர்களைப் பெற்று நாற்றுக்களை வளரச் செய்து நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆண்டின் இறுதி காலாண்டின் போது வளர்ந்து காணப்படுகின்ற காலநிலைக்கு தாக்குபிடிக்கும் இயலுமை இல்லாத நாற்றுக்களைப் பகிர்ந்தளித்தலும், கூட்டுத்தாபனத்தில் 27 மரமுந்திரகை அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடமாகக் காணப்படுதலும், ஒரு உத்தியோகத்தர் பல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் இந்த வெற்றியளிக்காமைக்கு காரணமாக இருந்தும் | முந்திரிகை நாற்றுக்கள் அழிவடைவதற்கு நீர் இல்லாமை, காட்டு மிருகங்கள், சேதமாக்குதல் காலநிலை மற்றும் சுற்றாடல் தாக்கம் ஆகிய பல்வேறு காரணங்கள் தாக்கமேற்படுத்தியுள்ள துடன் இதற்காக பணிப்பாளர்கள் சபையினால் சில நடைவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மரமுந்திரிகை அபிவிருத்தி உத்தியோகத்தரின் பற்றாக்குறைக்கு கூட்டுத்தாபனத்தின் நிதி சிக்கல் தாக்கமளித்துள்ளதுடன் உடனடியாக புதிய ஆட்சேர்ப்புக்களை செய்து கடமைகளை ஒப்படைத்தல் இடம்பெறுகின்றது. | காலநிலை மற்றும் சுற்றாடல் பாதிப்புக்களுக்கு தாக்கு பிடிக்கும் வகையில் நாற்றுக்களை வளரச் செய்வதற்கும் திட்டமிடுவதற்கும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதற்காக கூட்டுத்தாபனத்தினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் புத்தளம் மற்றும் கமன்தளுவ ஆராய்ச்சி நிலையத்திற்காக ரூபா 3,388,611 செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் முந்திரிகை பயிர்ச்செய்கை மற்றும் உப உற்பத்திகள் தொடர்பாக புதிய ஆராய்ச்சி எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் இரண்டு நிலையங்களில் முன்னயை ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்ட 08 ஆராய்ச்சிகள் மாத்திரம் இடம்பெற்று வருகின்றன. | கூட்டுத்தாபனத்தின் முந்திரிகை ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவினால் மீளாய்வு செய்யப்படுவதுடன் அக்குழுவின் அறிக்கையானது தேவையான தீர்மானம் எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு அனுப்பி வைக்கப்படும். | ஆராய்ச்சி நிலையங்களின் செயன்முன்னேற்ற மீளாய்விற்கான செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியதுடன் உப உற்பத்திகள் தொடர்பான புதிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| புத்தளம் முந்திரிகை செயன்முறைப்படுத்தும் நிலையத்தில் முந்திரிகை அவிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட 24 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான பொயிலேர் முறைமையானது 10 ஆண்டுகள் காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டிருந்தும் அந்த பொயிலர் முறைமையை கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது பொயிலர் மிகவும் உடைந்த நிலையில் காணப்படுவதனால் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வது பொருத்தமற்றது என தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே எதிர்காலத்தில் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பயன்படுத்த முடியாததனால் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் எலுவன்குளம் விதைப்பூங்காவில் முந்திரிகை உலர வைக்கும் தளமும் ஒரு கட்டிடமும் ரூபா 2,389,757 செலவு செய்து (வதியுடன்) நிர்மாணிக்கப்பட்டிருந்தும் உரிய செயற்பாடுகள் முறையான மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்படுவதன் காரணமாக தளத்தின் கொங்கிரிட் இடப்பட்ட நிலத்தில் கொங்கிரீட் மேற்பரப்பிற்கும் H இரும்பு சட்டத்திற்குமிடையே புளக்கல் பயன்படுத்தப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருந்த சுவர் வெடித்திருந்தது. அவ்வாறே அதில் H இரும்பு சட்டம் முன்னர் காணப்பட்ட அத்திவாரத்திற்கு தொடர்புபட்டிருந்ததனால் அத்திவாரம் இடத்திற்கு இடம் வெடித்திருந்த போதிலும் இக்குறைபாடுகளைச் சரி செய்வதற்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்வதிலுள்ள குறைபாடுகளை சரி செய்து தருமாறு ஒப்பந்தக்காரருக்கு தெரியப்படுத்தப்பட்டு ள்ளது. இந்நடவடிக்கை பூர்த்தி செய்யப்படும் வரை ஒப்பந்தத்தின் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிக்காமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாண நடவடிக்கைகளில் பொருண்மையான குறைபாடுகள் காணப்பட்டிருந்தும் அதனைக் கவனத்திற்கு கொள்ளாது கொடுப்பனவுகளுக்கு சிபாரிசு செய்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு “நிகழ்ச்சி நிரலின்” பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்காததன் காரணமாக அதன் செயலாற்றல் சம்பந்தமான நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய நிலைமைகளும் இலக்குகளின் அடிப்படையில் அடைந்து கொள்ள அளவீடு செய்வதற்கான குறிக்காட்டிகளையும் இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டிருக் கவில்லை. எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |